மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருவைகுண்டம்
2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08–ம் நாள் புதன்கிழமை
அ.வ.எண். 142/21

வா.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ரமேஷ் | தேதி : 08.10.25 |
| வயது : | த/பெ : ஹரிகரபுத்திரன் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>08.10.25 குறுக்கு விசாரணை</u>

1. ஈஸ்வரனின் தந்தை பெயர் பரமசிவன். பரமசிவனுக்கு ஈஸ்வரன், ஹரிகரபுத்திரன் என்ற 2 ஆண்மகன்கள் உண்டு. ஈஸ்வரன் 14.05.1989 ல் இறந்தார் என்றால் சரிதான். ஈஸ்வரனின் மனைவி பெயர் சுந்தரம். சுந்தரம் எப்போது இறந்தார் என்றால் ஈஸ்வரன் இறந்த பிறகு இறந்தார். ஈஸ்வரன்–சுந்தரம் தம்பதியினருக்கு வாரிசு சான்று பெற்றுள்ளோம் என்றால் ஆம். அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம்.

2.அந்த வாரிசு சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ளதாக கூறும் தங்கம்மாள் ஈஸ்வரனின் வாரிசு கிடையாது என்றால் சரியல்ல. ஈஸ்வரனுக்கு பரமசிவன், ஹரிகரபுத்திரன், சரஸ்வதி, செல்லத்துரை, பரிபூரணம் மட்டுமே வாரிசுகள் என்றால் தங்கம்மாளும் வாரிசு ஆவார். ஈஸ்வரனின் வாரிசு சான்றிதழை தாக்கல் செய்தால் தங்கம்மாள் வாரிசா அல்லது இல்லையா என்று தெரியும் என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 19:42:59 +0530

3. தாவா புல எண் 71/1 ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 1 ஏக்கர் 20 செண்ட் ஆகும். அந்த 1 ஏக்கர் 20 செண்ட் பாகப்பிரிவினை ஆகாமல் கூட்டுப்பட்டாவாகதான் உள்ளது என்றால் சரியல்ல. தனித்தனியாக அவரவர் பாகத்தை பொறுத்து பிரித்துவிட்டனர். எங்கள் பாகம் மட்டும் பிரிவினை ஆகவில்லை. வா.சா.ஆ 1 கணிணி பட்டாவின் படி தாவா சொத்து பிரிவினை ஆகாமல் 23 நபர்களின் பெயரில் கூட்டுப்பட்டாவாக உள்ளது என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ 1ல் கண்ட 23 நபர்களும் தாவா வழக்கிற்கு தேவையான தரப்பினர்கள் என்றால் சரியல்ல. ஈஸ்வரனின் சொத்துக்களை பொறுத்து 1984 ஆம் ஆண்டு நில உடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு இருந்து ஹரிகரபுத்திரன், பரமசிவன், செல்லத்துரை ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரிதான். ஈஸ்வரனின் பெண்மக்களான சரஸ்வதி, பரிபூரணம் ஆகியோர் அவர்களது பாகத்தை விட்டுக்கொடுத்ததால் தான் ஈஸ்வரனின் ஆண்மக்களின் பெயரில் பட்டா இருந்தது என்றால் சரிதான்.

5. என் தாயார் பாக்கியத்திற்கு செல்லத்துரை ஈஸ்வரனின் சொத்துக்களை பிரிவின்றி 3ல் 1 பாகத்தினை 04.11.1985 ல் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். ஈஸ்வரனின் பெண்மக்கள் அவர்களது பாகத்தை விட்டுக்கொடுத்ததால் தான் ஈஸ்வரனின் மகனான செல்லத்துரை 3ல் 1 பாகத்தினை கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். ஈஸ்வரனின் சொத்துக்களான ஸ்ரீமூலக்கரை கிராமம் அயன் நஞ்சை சர்வே எண்கள் 748/2B, 749/2, 750/3A, 750/6, 750/7C, 755/3 ஆகியவை ஹரிகரபுத்திரன், பரமசிவன், செல்லத்துரை பெயரில்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 19:43:04 +0530

இருந்தது என்றால் ஆம். ஆனால் அதை என் அம்மா கிரையம் வாங்கியுள்ளார். என் அம்மா செல்லத்துரையிடம் இருந்து 1985ல் ஒருசில சொத்துக்களை மட்டுமே கிரையம் பெற்றுள்ளார் என்றும் அனைத்து சொத்துக்களையும் கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல.

6. ஸ்ரீமூலக்கரை கிராமத்தில் ஈஸ்வரனுக்கு பாத்தியப்பட்ட மேற்படி சொத்துக்களை பொறுத்து என் சித்தப்பா பரமசிவன் எந்த ஆவணமும் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் தேதி ஞாபகம் இல்லை. அந்த ஆவணத்தை தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். பரமசிவன் எந்த காலத்திலும் என் தாயாருக்கு மேற்படி சொத்துக்களை கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக அவ்வாறு கிரையம் கொடுத்ததாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. பரமசிவன் திருமணம் ஆகாமல் இறந்ததால் அவரது பாகம் ஹரிகரபுத்திரன் மற்றும் செல்லத்துரைக்கு தான் பாத்தியம் என்றால் சரிதான். ஸ்ரீமூலக்கரை கிராமத்தில் சர்வே எண்கள் 748/2B, 749/2, 750/3A, 750/6, 750/7C, 755/3 ல் அமைந்துள்ள சொத்துக்கள் தாவா வழக்கில் சேர்க்கப்படாததால் தாவா வழக்கு பகுதிப் பாகப்பிரிவினையால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தன்னூத்து கிராமம் நத்தம் சர்வே எண் 70 ல் உள்ள ஈஸ்வரனுக்கு உள்ள வீட்டை நான் அனுபவித்து வருகிறேன்

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 19:43:09 +0530

என்றால் வயல்காடு மற்றும் புஞ்சை நிலங்களை பாகம் பிரித்ததில் மேற்படி வீடு எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது.

8. ஸ்ரீமூலக்கரை கிராமத்தில் ஈஸ்வரனுக்கு உள்ள நஞ்சை நிலங்கள் பொறுத்து வாய்மொழி பாகப்பிரிவினை நடந்ததா என்றால் இல்லை. எழுதிக்கொடுத்துள்ளனர். அவ்வாறு எழுதிக்கொடுத்துள்ள பத்திரத்தை தாக்கல் செய்யலாமா என்றால் தாக்கல் செய்யலாம். யார் யார் யார் யாருக்கு அவ்வாறு எழுதிக்கொடுத்தனர் என்றால் செல்லத்துரை, பரமசிவன் ஆகியோர் எனது தாயார் பாக்கியத்திற்கு எழுதிக்கொடுத்துள்ளனர். மேற்படி ஆவணங்கள் குறித்து நான் இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் அந்த சொத்துக்களை பொறுத்து நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை.

9. ஈஸ்வரனின் அனைத்து சொத்துக்களையும் சேர்க்காததால் அவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. ஹரிகரபுத்திரனுக்கு ஒரு மகளும், மகனும் ஆவர். அதில் மகன் சுப்பிரமணியன் இறந்துவிட்டார். சுப்பிரமணியனுக்கு மகனோ, மகளோ கிடையாது. திருமணம் ஆகாமல் இறந்துவிட்டார். ஹரிகரபுத்திரனின் மகள் பரிபூரணம் உள்ளார். பரிபூரணம் ஹரிகரபுத்திரனின் சொத்துக்களை 1ம் பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

10. தாவா புல எண் 71/1 ஈஸ்வரனுக்கு அவரது தந்தை மூலம் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றால் சரிதான். அதனால் ஹரிகரபுத்திரன், அவரது சகோதரர் ஈஸ்வரன் ஆகியோருக்கு தாவா சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 19:43:15 +0530

தாவா சொத்து முழுவதும் ஈஸ்வரனுக்கு மட்டும் தனித்து பாத்தியப்பட்டது என்பதற்கு ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அதனால் ஹரிகரபுத்திரனின் மகளான பரிபூரணம் தாவா வழக்கிற்கு தேவையான தரப்பினர் என்றால் சரியல்ல. அதனால் ஹரிகரபுத்திரனின் மகளான பரிபூரணம் தாவா சொத்தில் 15 செண்டினை 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

11. என் தாத்தா ஈஸ்வரன் குடும்ப சொத்துக்களை பொறுத்து செட்டில் மெண்ட் செய்யும் போது 15 செண்ட் செல்லத்துரைக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் தாவா சொத்தான 30 செண்ட் செல்லத்துரை மற்றும் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. செல்லத்துரை அவரது மனைவியான 1ம் பிரதிவாதிக்கு 08.04.2019ல் ஒரு ஏற்பாடு ஆவணம் 25 செண்டினை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பொய்யான ஆவணம்.

12. செல்லத்துரை மீதம் உள்ள 5 செண்டினை அவரது கையிருப்பாக வைத்துள்ளார் என்றால் சரியல்ல. 08.04.2019ம் தேதிய ஏற்பாடு ஆவணம் முறைப்படி எழுதிக்கொடுக்கப்பட்ட சட்டப்படியான ஆவணம் என்றால் சரியல்ல. என் தந்தை எனக்கு 24.07.2017ல் ஒரு ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த ஏற்பாடு ஆவணத்தில் பரமசிவன் பாகத்தினை வாய்மொழியாக கிரையம் பெற்றதாக என் தந்தை சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 19:43:21 +0530

13. மேற்படி ஏற்பாடு ஆவணத்தில் பட்டா எண்கள் 496, 506, 508, 599, 810, 969, 970, 813 ஆகியவைகளில் கண்ட சொத்துக்களை பொறுத்து மோசடியாக ஏற்பாடு செய்துக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ஈஸ்வரனின் மகனான பரமசிவனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை மோசடி செய்யும் நோக்கில் என் தந்தை மேற்படி ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விஷயங்களை மறைத்து ஒரு சொத்தினை பொறுத்து மட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2025.09.01 19:43:26 +0530